සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – New/Old Syllabus

NEW/OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் I Communication and Media Studies I	29	T	I

30.08.2019 / 0830 – 1030

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

අවිවුරුත්තල්කළ් :

* **එල්ලා** විනාක්කළුක්කුම් විටෙ එළුතුක.
* විටෙත්තාළිල් තරප්පට්ටුළ්ළ ඉටත්තිල් උමතු **සුට්ටෙණ්ණෙ** එළුතුක.
* විටෙත්තාළින් මරුපක්කත්තිල් තරප්පට්ටුළ්ළ අවිවුරුත්තල්කළෙක් කවනමාක වාසිත්තුප් පින්පර්රුක.
* **1** තොටක්කම් **50** වරෙයුළ්ළ විනාක්කළ් ඔව්වොන්රුක්කුම් (1), (2), (3), (4), (5) එන ඉලක්කමිටප්පට්ට විටෙකළිල් **සරියාන** අල්ලතු **මිකප් පොරුත්තමාන** විටෙයෛත් තෙරින්තෙටුත්තු, **අතනෙක් කුරිත්තු නිර්කුම් ඉලක්කත්තෛත් තරප්පට්ටුළ්ළ අවිවුරුත්තල්කළුක්කු අමෙය** විටෙත්තාළිල් **පුළ්ළටි** (×) ඉටුවතන් මූලම් කාට්টුක.

1. වෙකුසන ඌටකඞ්කළින් ඉරුප්පිර්කු අටිප්පටෙයාකත් තේවෛප්පටුවතු එතු /එවෛ?
(1) කරුත්තුක්කළ් (2) ඔළුඞ්කමෛප්පුක්කළ් (3) නිරුවනඞ්කළ්
(4) තකවල් (5) විළඞ්කරිවු

2. තොටර්පාටල් මාතිරියොන්රිල් මනප්පාඞ්කු පර්රිය පකුප්පාය්වෛ මේර්කොණ්ටවර් / මේර්කොණ්ටවර්කළ්
(1) ටේවිට් කේ. පෙර්ලෝ (2) ෂනොන්, වීවර් ආකියෝරාවර්(3) විල්පර් ෂ්රාම්
(4) හරෝල්ට් ඩ. ලාස්වෙල් (5) චාර්ල්ස් ඔස්කුට්

3. ආසිරියර් වකුප්පරෛයිල් පයන්පටුත්තිය චිල චොර්කළින් පොරුළෛ අරියාත මාණවර්කළ් කලෛක්කළඤ්චියත්තෛප් පුරට්ටිප් පාර්ත්තනර්. ඉච්චන්තර්ප්පත්තිල් මාණවර්කළාල් මේර්කොළ්ළප්පට්ටතු
(1) පොරුට්කෝටල් (2) කුරිමුරෛයාක්කම් (3) කුරිමුරෛයවිළ්ප්පු
(4) මොළිපෙයර්ප්පු (5) පකුප්පාය්වු

4. ඔරු නාට්ටිල් මාර්රු ඌටකඞ්කළින් පයන්පාටු විරිවුපටුත්තප්පටුවතර්කාන පිරතාන කාරණමාවතු,
(1) පුතිය ඌටකඞ්කළ් වළුවූට්ටප්පටුතල් (2) විළඞ්කරිවු වළුවූට්ටප්පටුතල්
(3) සුයාතීන ඌටකප් පාවනෛ (4) අතිකාරවාත ඌටකප් පෝක්කු
(5) අච්චු නටවටික්කෛකළ් ඉලකුවටෛතල්

5. අන්රාට වාළ්විල් ඔරු තනිනපරින් තොටර්පාටල් කොළ්තිරනිල් අතිකළවු පයන්පටුත්තප්පටුවතු
(1) චෙවිමටුත්තළුක්කාකුම්. (2) පේചුවතර්කාකුම්. (3) වාසිප්පතර්කාකුම්.
(4) එළුතුවතර්කාකුම්. (5) ආර්රුකෛක්කාකුම්.

6. වාය්මොළියල්ලාත තොටර්පාටලින් ඉයල්පු **අල්ලාතතු**
(1) තොටර්ච්චියාන චෙයන්මුරෛයාක ඉරුත්තල්
(2) අකවයත් තන්මෛයිලිරුන්තු විටුපට්ටිරුත්තල්
(3) පල්වේරු මුරෛකළෛප් පයන්පටුත්තක්කූටියතායිරුත්තල්
(4) තන්නෙළුච්චියාකවුම් චෙයර්පටක්කූටියතායිරුත්තල්
(5) පොතුවාන ඔළුඞ්කුවිති කාණප්පටාතිරුත්තල්

7. අපිවිරුත්තිත් තොටර්පාටලිල් මතකුරු, චුතේච මරුත්තුවර්, අපිවිරුත්ති උත්තියෝකත්තර් ආකියෝරෛ ඉණෛත්තුක් කොළ්වතන් මූලම් තෙළිවුපටුත්තප්පටුවතු
(1) පඞ්කුපර්රල් අණුකුමුරෛ (2) තනිනපර් විම්පම්
(3) චමුතාය ඌටක අණුකුමුරෛ (4) ඉරුපටිනිලෛක් කෝට්පාටු
(5) පෙරුනර් මෛය අණුකුමුරෛ

[පක්. 2 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

8. கடற்கரையோரக் கிராமமொன்றின் மக்களுக்குச் சுனாமி அனர்த்தச் சந்தர்ப்பத்தில் அவ் அச்சுறுத்தல் பற்றிய அறிவிப்பு மிகவும் துரிதமாகவும் பரவலாகவும் வழங்கப்படக் கூடியது
(1) எழுத்துமூலத் தொடர்பாடல் மூலமாகும். (2) கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
(3) செவிப்புலத் தொடர்பாடல் மூலமாகும். (4) செவிப்புல - கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.
(5) எழுத்துமூல - கட்புலத் தொடர்பாடல் மூலமாகும்.

9. குறுகியகால ஞாபகத்தில் உள்ள விடயங்களை நீண்டகால ஞாபகமாகக் கொண்டு செல்வதில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணியாக **அமையாதது**
(1) அழுத்தமாகக் கூறல் (2) பயன்படுத்துதல் (3) ஆழ்ந்து சிந்தித்தல்
(4) கற்பனை செய்தல் (5) பயிற்சி செய்தல்

10. படைப்பாக்குநர் ஒருவர் தன் படைப்பாக்கங்களை மக்கள் உணரும் வண்ணம் முன்வைக்க இயலுமாயிருப்பது
(1) மொழிசார்ந்த விளக்கத்தைக் கொண்டிருப்பதனாலாகும்.
(2) கருப்பொருள் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருப்பதனாலாகும்.
(3) ஆழ்பரிவைக் கொண்டிருப்பதனாலாகும்.
(4) புலனுணர்வுச் சக்தியைக் கொண்டிருப்பதனாலாகும்.
(5) வெகுசன உணர்வு பற்றிய விளக்கத்தைக் கொண்டிருப்பதனாலாகும்.

11. பாடசாலையில் ஆசிரியர் குழாத்தினர் தமக்கிடையே பரஸ்பர ஒத்துழைப்பைப் பேணி, குழு உணர்வுடன், களைப்பைப் பற்றிச் சிந்திக்காதும் செயற்பட்டதால் பாடசாலையின் பரீட்சைப் பெறுபேற்றை வரலாறு காணாத அளவிற்கு உயர்த்த முடிந்தது. அவர்களது வெற்றியின் பின்னணியில் இருப்பது
(1) பொறுப்புணர்வு (2) பொறுப்புக்கூறல் (3) கடமையுணர்வு
(4) ஒருமைப்பாடு (5) ஆழ்பரிவு

12. நோக்கம், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் முதலான கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து மிகவும் பொறுப்புடன் கூடிய தொடர்பாடல் வகை எது?
(1) குழுத் தொடர்பாடல் (2) ஆளுள் தொடர்பாடல் (3) ஆட்களிடைத் தொடர்பாடல்
(4) வெகுசனத் தொடர்பாடல் (5) பொதுசனத் தொடர்பாடல்

13. தொடர்பாடல் களம் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட வேண்டியதாகும் எனும் கருத்து முதன்முதலில் அழுத்தமாகக் கூறப்பட்டது
(1) அதிகாரவாதத் தொடர்பாடல் எண்ணக்கரு மூலமாகும்.
(2) தாராண்மைவாதத் தொடர்பாடல் எண்ணக்கரு மூலமாகும்.
(3) சமூக ஜனநாயகமாக்கல் தொடர்பாடல் எண்ணக்கரு மூலமாகும்.
(4) சோவியத் சமவுடைமை தொடர்பாடல் எண்ணக்கரு மூலமாகும்.
(5) சமூகப் பொறுப்பு தொடர்பான தொடர்பாடல் எண்ணக்கரு மூலமாகும்.

14. தொடர்பாடல் எனும் எண்ணக்கருவின் அடிப்படை அர்த்தமாவது
(1) தகவல் பரிமாற்றம்
(2) செய்திகளை எடுத்துச் செல்லல்
(3) தனிப்பட்ட இடைத்தொடர்பு
(4) ஒரு விடயத்தை இன்னுமொருவருக்கு அறியப்படுத்துதல்
(5) தனித்திருக்கும் பகுதியினர் மத்தியில் தொடர்பினை ஏற்படுத்துதல்

15. நாட்டார் நம்பிக்கைகள் பற்றிய ஆய்வு தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் **தவறானது,**
(1) சமூக யதார்த்தத்துடன் இணைந்திருத்தல்
(2) சமூக நிலைபேறிற்கு அவசியமானது எனக் கருதப்படுதல்
(3) மதங்களிலிருந்து விலகி நிலைத்திருக்காமை
(4) கீழைத்தேய நாடுகளில் பரவலாகக் காணப்படுதல்
(5) விசுவாசங்களிலிருந்து விடுபடாதிருத்தல்

[பக். 3 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

16. இலங்கையிலுள்ள நாடோடி மக்கள் இலங்கையின் பண்பாட்டுப் பாரம்பரியங்களை உள்வாங்கியுள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது. இது
(1) பண்பாட்டுப் பரவுகையாகும். (2) பண்பாட்டு ஆர்முடுகலாகும். (3) பண்பாட்டு அதிர்வாகும்.
(4) பண்பாட்டுத் தேக்கமாகும். (5) துணைப் பண்பாட்டாக்கமாகும்.

17. அபிவிருத்திச் செய்திகளை முன்னெடுத்துச் செல்லும் பணியின் பண்பு **அல்லாதது**
(1) நிபுணத்துவ நெறிப்படுத்தல் தேவைப்படுதல்
(2) திட்டம் பற்றிய அனைத்து விடயங்கள் பற்றியும் விளக்கம் கொண்டிருத்தல்
(3) நேர வரையறை ஒன்று இன்றிச் செயற்படுதல்
(4) பெறுநர்களின் எதிர்வினைகளைப் பெறுவதற்காகப் பணியாற்றுதல்
(5) மதிப்பீட்டிற்கான வேலைத்திட்டமொன்று காணப்படுதல்

18. "உங்களது கூற்றின் கட்டமைப்பு அம்சங்கள் கற்றுத்தேர்ந்த மக்களுக்கு வெளிப்படையாகத் தெரியக்கூடியதாயிருக்கும்."
மேற்குறித்த வாக்கியம் ஆசிரியர் ஒருவரால் ஐந்தாம் தர மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. தொடர்பாடல் பாடப்பரப்பின்படி, இது இனங்காணத்தக்கதாய் இருப்பது,
(1) ஆழமான வாக்கியம் என்றாகும். (2) வசன அமைப்பு சார்ந்த தவறு என்றாகும்.
(3) கருத்துத் தடை என்றாகும். (4) கல்விசார் கூற்று என்றாகும்.
(5) அனுபவக் களத்தின் தவறொன்று என்றாகும்.

19. நாட்டாரியல், நூல்களிலன்றி வாய்மொழி வழக்காறு வழியாகவே பேணப்படுகிறது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டிய முதலாவது இலங்கை அறிஞர்
(1) மார்ட்டின் விக்கிரமசிங்க (2) ஆனந்த குமாரசுவாமி (3) நந்தசேன ரத்னபால
(4) ரல்ப் பீரிஸ் (5) கார்த்திகேசு சிவத்தம்பி

20. ஊடக விளங்கறிவினூடாக அடிப்படையில் விருத்தி செய்ய முயற்சிக்கப்படுவது யாது?
(1) செய்தி விமர்சனத்திறன்
(2) செய்தி உருவாக்கும் திறன்
(3) செய்திகளை மதிப்பிடும் திறன்
(4) செய்திகளை உள்வாங்கும் திறன்
(5) செய்திகளை பொருட்கோடல் செய்யும் திறன்

21. பின்வரும் கூற்றுகளைக் கருத்திற்கொள்க.
A - அபிவிருத்தியின் அடிப்படைகளாக வெகுசன ஊடகங்கள் அமைந்திருப்பதால் அவை திட்டமிடப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும்.
B - சமூகத்தின் ஒவ்வொரு வரலாற்று மாற்றமும் வர்க்கப் போராட்டத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகும்.
C - கைத்தொழில் வளர்ச்சியுடன் தொழிலாற்றும் பணியாளர் வர்க்கம் தோற்றம் பெற்றது.
D - புதிய வர்த்தக வர்க்கம் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒடுக்குகிறது.
மேற்குறித்த கூற்றுகளுள் சமூக ஆய்விற்கான மாக்சிச அணுகுமுறையின்படி சரியானதாக அமைவன,
(1) A யும் B யும் மாத்திரம் (2) B யும் C யும் மாத்திரம் (3) C யும் D யும் மாத்திரம்
(4) A , B, C ஆகியன மாத்திரம் (5) B, C, D ஆகியன மாத்திரம்

22. பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்பில் உள்ள 'பலநோக்கு' என்பதில் உள்ளடங்குவன,
(1) பங்கீட்டுப் பொருட்களை வழங்குதல், நிவாரணம் வழங்குதல், உற்பத்தி மேற்கொள்ளல், பொருட்களை விற்பனை செய்தல் ஆகியனவாகும்.
(2) திட்டமிடல், பணிகள் பங்கீடு, பணியாற்றுதல், வழிப்படுத்துதல் ஆகியனவாகும்.
(3) பொருள், விலை, இடம், மேம்படுத்துதல் ஆகியனவாகும்.
(4) உற்பத்தி, மேம்படுத்துதல், பிரசித்தப்படுத்தல், சந்தைப்படுத்தல் ஆகியனவாகும்.
(5) உற்பத்தி, சந்தைப்படுத்தல், விநியோகித்தல், கொள்வனவு செய்தல் ஆகியனவாகும்.

23. ஒரு செய்தியைப் படைப்பாக்க ரீதியில் முன்வைக்கும்போது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் **அல்லாதது,**
(1) பெறுநரால் இலகுவில் உள்வாங்கக் கூடியதாயிருத்தல்
(2) பெறுநரிடம் உள்ளக்கிளர்ச்சியை உருவாக்கக் கூடியதாயிருத்தல்
(3) பெறுநருக்குப் பரீட்சயமான மாதிரியொன்றைப் பயன்படுத்தல்
(4) பெறுநருக்கு மகிழ்ச்சியையும் வாழ்க்கை பற்றிய விளக்கத்தையும் வழங்குதல்
(5) பெறுநரின் விளங்கறிவுத் திறனுடன் பொருந்தக்கூடியதாயிருத்தல்

[பக். 4 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

24. படைப்பாளி ஒருவருக்குத் தனது சுய அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கு மிகவும் இலகுவானதாக அமைவது

(1) கவிதை வாசித்தலிலாகும்.
(2) ஓவியம் வரைதலிலாகும்.
(3) திரைப்படம் தயாரித்தலிலாகும்.
(4) மேடை நாடகத்திலாகும்.
(5) தொலைக்காட்சித் தொடர் நாடகங்களிலாகும்.

25. தாராண்மைவாதத் தொடர்பாடல் பற்றிய அடிப்படை எண்ணக்கருவை விருத்தி செய்வதற்குப் பங்காற்றிய மெய்யியலாளர்களை மாத்திரம் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) ஜோன் பென்தம், ஜோன் லொக், ஜோன் மில்டன், ஜோன் ஸ்டுவர்ட் மில்
(2) ஜோன் மில்டன், ஜோன் ஸ்டுவர்ட் மில், நிகோலோய் மாக்கியவெல்லி, கார்ள் மார்க்ஸ்
(3) நிகோலோய் மாக்கியவெல்லி, ஜோன் லொக், ஜோன் மில்டன், தோமஸ் ஹோப்ஸ்
(4) ஜோன் லொக், ஜோன் மில்டன், ஜோன் ஸ்டுவர்ட் மில், ∴ப்ரெட்ரிக் ஹெகல்
(5) தோமஸ் ஹோப்ஸ், அடம் ஸ்மித், ∴ப்ரெட்ரிக் ஹெகல், ஜோர்ஜ் கெப்னர்

26. **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) உள அழுத்தம் ஆளுள் தொடர்பாடலின் இயல்பாகும்.
(2) நண்பர்களின் இழப்பின் காரணமாக சோர்வு உருவாகலாம்.
(3) தானும் மற்றவரும் சரியெனச் சிந்திப்பது துருவமயப்படுத்தல் என இனங்காணப்படும்.
(4) அதிகளவில் உண்ணும் பழக்கம் பதகளிப்பின் ஓர் இயல்பாகும்.
(5) தமக்குரிய பணியின் இலக்குகளைப் பூரணப்படுத்த முடியாமல் இருப்பதனால் பதற்றம் தோன்றலாம்.

27. மொழிப் பாவனையுடன் தொடர்புடைய சில கூற்றுக்கள் பின்வருமாறு;

A - சுய வெளிப்பாட்டை முன்வைக்கும் ஆற்றல்
B - தனியாட்களை மையப்படுத்திய செயற்பாடு
C - தனிப்பட்ட நோக்குநிலை அவசியமாயிருத்தல்

மேற்படி கூற்றுக்களுக்கேற்றவாறு மொழிப் பாவனை வகைகளை ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் தெரிவு யாது?

(1) பேச்சு, விவரணம், பிரதி எழுத்து
(2) ஆற்றுகை, பிரதி எழுத்து, விவரணம்
(3) உரை, ஆற்றுகை, பேச்சு
(4) பேச்சு, ஆற்றுகை, விவரணம்
(5) பிரதி எழுத்து, பேச்சு, உரை

28. உலகின் வேறுபட்ட இனக்குழுக்களதும் தேசங்களினதும் ஆன்மீகப் பண்பாட்டிற்கு மாத்திரம் உரிய விடயங்களை உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) மதம், கலை, புராணங்கள், அரசியல்
(2) பொருளாதாரம், தொழினுட்பம், விஞ்ஞானம், கலை
(3) கலை, மதம், மெய்யியல், புராணங்கள்
(4) மெய்யியல், தொல்பொருளியல், கலை, மதம்
(5) பொருளாதாரம், தொல்பொருளியல், புராணங்கள், விஞ்ஞானம்

29. உலகமயமாதல் செயன்முறையின் ஒரு முன்நிபந்தனையாக அமைவது

(1) தொழினுட்பச் செயன்முறையை நிராகரித்தல்
(2) குடும்பம், தேசிய விழுமியங்களுக்கு முன்னுரிமை வழங்குதல்
(3) மூடப்பட்ட இனத்துவம்
(4) மீதேசிய நிறுவனங்களின் உருவாக்கம்
(5) தொடர்பாடல் செயன்முறையின் விரிவாக்கம்

30. மொழிப் பண்பாட்டில் **உள்ளடங்காதது**

(1) கொண்டாட்ட நிகழ்வுகளுடன் தொடர்புடைய செயற்பாடுகள்
(2) மெய்யியல் அடிப்படையிலான படைப்புக்களும் ஒப்பித்தல்களும் உருவாகுதல்
(3) மனிதனுடன் தொடர்புடைய வெளிவாரியான இயற்கைப் பொருட்கள்
(4) மனிதனின் சமூகப் பழக்கவழக்கங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள்
(5) தனக்குத் தானே பேசிக் கொள்வதுடன் தொடர்புடைய தொடர்பாடல் செயற்பாடுகள்

[பக். 5 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

31. பொலிஸ் - பொதுசன உறவு, குற்றத்தடுப்புப் பணியகத்துடன் தொடர்புடைய பணிகள் பற்றிய கருத்துக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டக்கூடிய விரிவுரைகளை நடாத்துதல்
B - சமய விழாக்களில் பொதுமக்களுக்கு உதவுதல்
C - குற்றவாளிகளுக்குத் தண்டனைகளைப் பெற்றுக்கொடுத்தல்
D - வெகுசன ஊடகங்களுக்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

மேற்குறித்தவற்றில் இவற்றுக்கு மிகப் பொருத்தமான பணிகளாக அமைவன

(1) A யும் B யுமாகும். (2) B யும் C யுமாகும். (3) C யும் D யுமாகும்.
(4) A, B, D ஆகியனவாகும். (5) B, C, D ஆகியனவாகும்.

32. சமூகத்தினால் தொடர்பாடலிலும் தொடர்பாடலால் சமூகத்திலும் பரஸ்பர அடிப்படையில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி எது?

(1) அரசியல் சார்ந்த காரணி (2) சூழல் சார்ந்த காரணி
(3) படைப்பாக்கம் சார்ந்த காரணி (4) பொருளாதாரம் சார்ந்த காரணி
(5) தொழினுட்பம் சார்ந்த காரணி

33. ஊடகங்கள் வழியாக வன்முறைகள் நிறைந்த நிகழ்ச்சிகள் முன்வைக்கப்படுவதால் ஏற்படும் சமூகத் தாக்கங்கள் பற்றி வகுப்பறையில் மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

ரஹீம் :- அவ்வாறான நிகழ்ச்சிகளைப் பார்ப்பது சிலருக்கு விருப்பம்.
ராமன் :- மாணவர்களின் வாழ்க்கையில் தீவிரமாகச் செல்வாக்குச் செலுத்தலாம்.
கமலி :- சில நேரங்களில் வன்முறை குறைவடையலாம்.
ரமணி :- குடும்பங்கள் மத்தியில் விரும்பத்தகாத பிரச்சினைகளும் உருவாகலாம்.

இச் சிந்தனைகளில் ஏற்றுக்கொள்ளத்தக்க சிந்தனைகளை முன்வைத்தவர்கள்

(1) ரஹீம், ராமன், கமலி ஆகியோர் மாத்திரமாவர்
(2) ராமன், கமலி, ரமணி ஆகியோர் மாத்திரமாவர்
(3) ரஹீம், கமலி, ரமணி ஆகியோர் மாத்திரமாவர்.
(4) ரஹீம், ராமன், ரமணி ஆகியோர் மாத்திரமாவர்.
(5) ரஹீம், ராமன், கமலி, ரமணி ஆகிய அனைவருமாகும்.

34. ஊடக விளம்பரப்படுத்தல் பற்றிய விவாதமொன்றில் எடுத்துரைக்கப்பட்ட விடயங்களுக்கேற்ப அது,

A - ஒரு சமூகத் தேவையாகும்.
B - சமூகத்திற்கு நல்ல விடயமொன்றை வழங்கும்.
C - சமூகத்திற்குத் தீங்கான விடயமொன்றை வழங்கும்.
D - சமூக அபிப்பிராயங்களை மாற்றும்.

மேற்குறித்த கூற்றுக்களில்,

(1) A, B, C ஆகியன மாத்திரம் சரியானவை.
(2) A, B, D ஆகியன மாத்திரம் சரியானவை.
(3) A, C, D ஆகியன மாத்திரம் சரியானவை.
(4) B, C, D ஆகியன மாத்திரம் சரியானவை.
(5) A, B, C, D ஆகிய அனைத்தும் சரியானவை.

35. "ஒருவன் தான் விரும்பிய விடயங்களை வெளிப்படுத்த இயலாத இடத்தில் அவனுக்கு எதுவும் சொந்தமாகாது." கிரேக்க மெய்யியலாளரான பிளேட்டோவின் (Plato) இக்கூற்று குறிப்பிடுவது,

(1) இணக்கமின்மையின் பெறுமதியையாகும்.
(2) சுயாதீனக் கருத்தியலின் முக்கியத்துவத்தையாகும்.
(3) சகோதரத்துவத்தின் அவசியத்தையாகும்.
(4) ஆழ்பரிவின் குணாதிசயத்தையாகும்.
(5) இன நல்லிணக்கத்தையாகும்.

36. யாதேனுமொரு மொழி இறந்த மொழியாக மாறுவதால் ஏற்படக்கூடிய தீவிரமான நிலைமைகள் பற்றிய சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - குறித்த மக்கள் தமது கருத்துக்களைத் தொடர்பாடல் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களை இழப்பர்
B - குறித்த மக்களது பண்பாட்டு அடையாளத்தைத் தக்க வைக்கும் ஆற்றல் வீழ்ச்சியடைதல்
C - குறித்த மொழியில் உள்ளடங்கியிருக்கும் அறிவு மறைந்து போதல்
D - குறித்த மக்களுக்கு ஒரு தேசமாக அல்லது ஒரு இனக் குழுவாக முன்பிருந்த வரவேற்பு மறைந்து போதல்

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை

(1) A, B , C ஆகியன மாத்திரம் (2) A, B, D ஆகியன மாத்திரம்
(3) A, C, D ஆகியன மாத்திரம் (4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகிய அனைத்தும்.

[பக். 6 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

37. மனித நல்லொழுக்கங்களை கருவாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திரைப்படம் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் பல செய்திப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டன. ஒரு செய்திப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையானது திரைப்படம் பற்றிய கலைத்துவ அம்சங்கள், உள்ளார்ந்த இயல்புகள் ஆகியன தொடர்பிலான திறனாய்வை உள்ளடக்கியிருந்தது. இங்கு விமர்சகர் பயன்படுத்திய விமர்சனமுறை யாது?

(1) அழகியல்சார் விமர்சனம் (2) அறநெறிசார் விமர்சனம் (3) அரசியல்சார் விமர்சனம்
(4) ஒப்பீட்டு விமர்சனம் (5) மொழியியல்சார் விமர்சனம்

● **38** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்குக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.

A	அறியும் ஆற்றல்	G	சக்கரம்
B	புத்தாக்கப் பரவுகை	H	சேரிகள்
C	மந்த போஷாக்கு	I	பிரஜைகளை வலுப்படுத்தல்
D	எண்ணிமமாக்குதல்	J	சுயஇராஜ்யம்
E	அலட்சியம்	K	தொழிலின்மை
F	தன்னம்பிக்கை	L	ஆட்களுக்கிடையிலான நம்பிக்கை

38. மேற்படி அட்டவணையில், போல். பீ. ஸ்டீவனின் வரைவிலக்கணத்தில் உள்ளடங்கும் அம்சங்களாக அமைவன,

(1) A, C, D, J. (2) C, E, H, K. (3) C, H, E, L.
(4) C, K, E, G. (5) E, D, B, H.

39. நாயர் வைட் ஆகியோர் முன்வைத்த அபிவிருத்தித் தொடர்பாடல் மாதிரிக்குரிய எண்ணக்கருக்களுடன் தொடர்பானவை

(1) B, F, D. (2) D, I, L. (3) F, I, L.
(4) I, J, F. (5) L, G, A.

40. அபிவிருத்தி தொடர்பான சீன மாதிரி, மகாத்மாகாந்தி பயன்படுத்திய தொடர்பாடல் ஆகியவற்றுடன் தொடர்புடைய குழுக்கள் முறையே

(1) AB, GI. (2) AD, GJ. (3) AF, GK.
(4) BD, GJ. (5) CD, JL.

41. திரைப்படமொன்றின் தொடர்காட்சிகளில் முதலாவது காட்சியாக நபரொருவர் இறக்கும் காட்சி காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து, ஆற்றுப்படுக்கை ஒன்றின் மீதாகத் தொடர்ச்சியாகப் பறக்கும் பறவைகளின் காட்சியொன்று அடுத்ததாக இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் காட்சிகளைப் பார்த்த பாலன் அந்தக் காட்சிச் செயற்பாடு பற்றித் தன்னால் எதனையும் புரிந்துகொள்ள முடியாதிருந்ததாகத் தெரிவித்தார். பாலன் முன்வைத்த இந்தக் கருத்திற்குக் காரணமாக அமையக்கூடியது

(1) பாலனால் திரைப்படக் குறியீடுகளின் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துகொள்ள இயலாதிருந்தமை
(2) பாலனிடம் திரைப்பட ஊடகப் பண்பாடு பற்றிய சரியான புரிந்துணர்வு இல்லாதிருந்தமை
(3) பாலன் அமர்ந்திருந்த இடத்திலிருந்து திரைப்படத்தைச் சரியாகப் பார்வையிட இயலாதிருந்தமை
(4) பாலன் எழுத்தறிவைக் கொண்டிராதிருந்தமை
(5) திரைப்படத்தின் காணொளிகள் பாலனுக்குத் தெளிவற்றதாக இருந்தமை

42. பின்வரும் கூற்றுக்களில் ஊடகக் கைத்தொழில் தொடர்பான **தவறான** கூற்று எது?

(1) மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பினுள் செயற்படுதல்
(2) சந்தைத் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் செயற்படுதல்
(3) செய்தியொன்று பல பகுதியினரது பங்களிப்புடன் உருவாக்கப்படுதல்
(4) ஊடக நிறுவனங்களுக்கிடையே போட்டித்தன்மை காணப்படுதல்
(5) அனைத்துச் சந்தர்ப்பங்களிலும சமூக உளநிலைப்பாட்டைச் சந்தை மேலாதிக்கத்திலிருந்து விடுவித்தல்.

[பக். 7 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

43. செய்திப் பத்திரிகையொன்றின் பதிப்பாசிரியருக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதியொன்றில் எழுத்துப் பிழைகளும் இலக்கணத் தவறுகளும் கொண்ட சில வாக்கியங்கள் காணப்பட்டன. அதில் காணப்பட்ட சரியான வாக்கியம் எது?

(1) பட்டமளிப்பு விழாவில் அவன் பங்குபற்றியிருந்தார்.
(2) தந்தை, தாய், மகன் கோயிலை நெருங்கியிருக்கக் காணப்பட்டது.
(3) இன்றைய காலனிலை அற்புதமானது.
(4) பண்மைத்துவம் மக்களிடையே காணப்படவில்லை.
(5) பிச்சைக்காரர்கள் பலர் புகைவண்டி நிலையத்தில் குழுமியிருந்தனர்.

44. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - நீங்கள் கூறுவது தெளிவாகவுள்ளது.
B - எனக்குத் தெரிந்த மொழியில்தான் சொல்கிறேன்.
C - அக்காரணம் மிகவும் பெறுமதியான ஒன்று.
D - ஏனைய நபர்களது ஒத்துழைப்புடன் அதை நாம் ஆரம்பிப்போம்.

மேற்குறித்த கூற்றுக்களுக்குப் பொருந்தும் செவிமடுத்தல் செயற்பாட்டின் சந்தர்ப்பங்களை ஒழுங்குமுறையில் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) விளங்கிக்கொள்ளுதல், செவிமடுத்தல், மதிப்பிடுதல், எதிர்வினையாற்றுதல்
(2) செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளுதல், எதிர்வினையாற்றுதல், மதிப்பிடுதல்
(3) விளங்கிக்கொள்ளுதல், எதிர்வினையாற்றுதல், மதிப்பிடுதல், செவிமடுத்தல்
(4) செவிமடுத்தல், மதிப்பிடுதல், விளங்கிக்கொள்ளுதல், எதிர்வினையாற்றுதல்
(5) செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளுதல், மதிப்பிடுதல், எதிர்வினையாற்றுதல்

45. பின்வரும் கூற்றுக்களில் **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.

(1) வாய்மொழி மூலத் தொடர்பாடல் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வாய்மொழியல்லாத குறியீடுகளுடன் இணைந்தே நிகழும்.
(2) அதிசயித்தலும் மகிழ்வடைதலும் படைப்பாக்க ரீதியிலான தொடர்பாடலின் விசேட இயல்புகளாகும்.
(3) சமூகத்தின் அதிகாரமைய இயல்பு தொடர்பாடல் செயற்பாட்டில் தாக்கம் செலுத்தாது.
(4) வறுமைப் பண்பாட்டிலிருந்து சமூகத்தை விடுவிப்பது அபிவிருத்தித் தொடர்பாடலின் ஒரு சவாலாகும்.
(5) சுதேச அறிவு தொகுக்கப்பட்டுள்ள வலுவான தொடர்பாடல் முறையாக சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் குறிப்பிடலாம்.

46. வேறுபிரித்தல் அல்லது பிரிவு அவசியமான ஆளுள் தனிநபர் தொடர்பாடல் செயற்பாடாகக் கருத்திற் கொள்ளக்கூடியதாக இருப்பது

(1) ஐம்புலன் உணர்வுகளுக்கும் அவதானத்தைச் செலுத்துவதாலாகும்.
(2) ஆழ்பரிவைப் பெற்றுக்கொள்வதாலாகும்.
(3) ஐம்புலனுணர்வுகளையும் தனித்தனியாக இனங்காண்பதற்காகும்.
(4) வினைத்திறன்மிக்க புலக்காட்சிக்காகவாகும்.
(5) எண்ணக்கருக்களை விசேடமான முறையில் கட்டியெழுப்புவதற்காகவாகும்.

47. பாரம்பரியச் சமூகத்தில் பல்லக்கில் பயணித்தல் முதல் நவீன சமூகத்தில் மகிழுந்தில் பயணித்தல் வரை நடைபெற்ற சமூக மாற்றம்

(1) பண்பாட்டு அதிர்வு ஆகும்.
(2) பண்பாட்டுப் பரவுகை ஆகும்.
(3) பண்பாட்டுத் தேக்கமாகும்.
(4) பண்பாட்டு ஆர்முடுகல் ஆகும்.
(5) பண்பாட்டுத் தேய்வாகும்.

48. சுதேச அறிவுத் தொகுதியை நினைவுபடுத்துவதற்காகவும் பரவலாகப் பேணிப் பாதுகாப்பதற்காகவும் முற்கால அறிஞர்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட வழிமுறை,

(1) படைப்பாக்க ரீதியிலான வெளியீடுகளாக மாற்றுதல்
(2) மனச்சித்திரங்களாக உருவகித்துக்கொள்ளல்
(3) சாராம்சப்படுத்தி நினைவில் வைத்துக் கொள்ளல்
(4) அத்தியாயங்களாக்கி நூல்களை உருவாக்குதல்
(5) தர்க்க வடிவமைப்பு ரீதியில் ஒழுங்குபடுத்திக்கொள்ளல்

[பக். 8 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

49. தனது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நீண்டகாலமாக அவற்றை முன்வைத்து அவை தோல்வியடைந்த நபரொருவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகப் பகிரங்கமாகப் பொதுக் கட்டடமொன்றின் கூரையில் ஏறிச் சாகும்வரை உண்ணாவிரத முயற்சியில் ஈடுபடுவது தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவருக்கு அறியக் கிடைத்தது. சமூகத்துடன் நட்புறவான செய்திகளைச் சேகரித்தல் தமது பொறுப்பாகக் கொண்ட ஓர் ஊடகவியலாளராக அவர் இங்கு செய்திருக்க வேண்டியது யாது?

(1) குறித்த நபர் பற்றிப் பொலிசாருக்கு அறிவித்து சம்பவத்திற்கு முன்னர் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தல்

(2) சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபடும் முயற்சியைத் தடுப்பதுடன் அதேவேளை அவரது கோரிக்கைளை ஊடகம் வழியாக வெளிப்படுத்தச் செய்தல்

(3) சம்பவங்களுக்கு உயர் முன்னுரிமையை வழங்கி அதனை உடனடிச் செய்தியாக ஊடகத்திற்கு அனுப்ப நினைத்தல்.

(4) தந்திரோபாயமாக ஏனைய ஊடக நிறுவனங்களின் செய்தியாளர்களைத் தடுப்பதுடன் அறிக்கையிடலின் தலைமையாளராகத் தான் உருவாவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

(5) அதிகாரிகள் இழைத்த தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக சாகும்வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட முயற்சித்த நபரின் கருத்துக்களை காணொளிக் காட்சியாக உருவாக்க முயற்சித்தல்

50. ஊடகம், பூகோளமயமாதல் ஆகியன பற்றிப் பாடசாலை ஊடகக் கழகத்தினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் உயர்தர மாணவர்கள் சிலர் முன்வைத்த கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

மதுஷி :- பூகோளமயமாதலின் பரவலுக்கு ஊடகம் துணைபுரிந்தது.

ரேணுகா :- வர்த்தகக் கைத்தொழிலின் சமகாலத் தேவையாக ஊடகப் பண்பாட்டை அறிமுகம் செய்யலாம்.

மேனகா :- வெகுசன ஊடகப் பண்பாட்டில் மூழ்கிப் போயுள்ள மக்கள் அதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருக்கமாட்டார்கள்.

பிரபோதினி :- தொழில்சார் ஊடகத்துறை அதன் சந்தை விரிவாக்கத்திற்காகப் பாரம்பரியச் சிந்தனைகளைப் பயன்படுத்துவதில்லை.

மேற்குறித்த கூற்றுக்களுள்,

(1) மதுஷி, ரேணுகா, மேனகா ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.

(2) ரேணுகா, மேனகா, பிரபோதினி ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.

(3) மதுஷி, மேனகா, பிரபோதினி ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.

(4) மதுஷி, ரேணுகா, பிரபோதினி ஆகியோரின் கூற்றுகள் மாத்திரம் சரியானவை.

(5) மதுஷி, ரேணுகா, மேனகா, பிரபோதினி ஆகிய அனைவரின் கூற்றுக்களும் சரியானவை.

***

Download Past Papers at : www.freebooks.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව/පැරණි නිර්දේශය – புதிய/பழைய பாடத்திட்டம் – New/Old Syllabus

NEW/OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் Communication & Media Studies	II II II	29 T II

31.08.2019 / 0830 - 1140

පැය තුනයි மூன்று மணித்தியாலம் Three hours	අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள் Additional Reading Time - 10 minutes

විභාග අංකය ලියන්න.

විනාඩි 10 ක් වැඩි කියවීම් කාලය ලැබේ.

විනාඩිපත්‍රිරත්තෙ වාසිත්තු, විනාක්කළෙත් තෙරිවුසෙය්වතර්කුම් විටෙ එළුතුම්පෝතු මුන්නුරිමෙ වළුංකුම් විනාක්කළෙ ඔළුංකමෙත්තුක් කොළ්වතර්කුම් මේලතික වාසිප්පු නේරත්තෛප් පයන්පටුත්තුක.

* **ඉන්දු** විනාක්කළුක්කු මාත්තිරම් විටෙ එළුතුක. ඔව්වොරු විනාවුක්කුම් **20** පුළ්ළිකළ් උරිත්තාකුම්.

1. தொடர்பாடல் பாடத்துறையின் சிக்கல்தன்மையானது தொடர்பாடல் மாதிரிகளின் ஊடாகத் தெளிவுபடுத்தப்படுகின்றது.

(i) ஆரம்பகாலத் தொடர்பாடல் மாதிரிகளில் **காணக்கிடைக்காததும்** ஹரோல்ட் டீ லாஸ்வெல் மாதிரியில் காணத்தக்கதுமான விசேட அடிப்படை ஆக்கக்கூறைப் பெயரிட்டு, அதுபற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ii) ஒஸ்குட், ஷ்ராம் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட மாதிரியின் அடிப்படையில் குறிமுறையவிழ்ப்பினை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு ஏதுவாகும் காரணியைப் பெயரிட்டு, அதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(iii) இருபடிநிலைத் தொடர்பாடல் மாதிரியின்படி தகவல் பரவும் விதத்தினை வரைபடம் ஒன்றின் ஊடாக விளக்குக.

(iv) தொடர்பாடல் செயன்முறையின் உயிரியல் அடிப்படையை இனங்காண ஏதுவாக அமையும் பெர்லோவின் தொடர்பாடல் மாதிரியின் அம்சங்கள் **நான்கினை** விளக்குக.

2. மனித மொழிப் பாவனை, குறியீடுகள், சின்னங்கள், நாட்டார் கலைகள் ஆகியவற்றின் இணைப்பு, படைப்பாக்கத் தொடர்பாடலில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இது வெகுசன ஊடகங்கள் வழியாகவும் தெளிவுபடுத்தப்படுகிறது.

(i) செய்திப்பத்திரிகை ஊடகத்தில் மொழிப் பாவனையில் காணத்தக்க **நான்கு** தவறுகளைக் குறிப்பிடுக.

(ii) தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் பால்மா விளம்பரங்களினால் நுகர்வோரிடத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களை **இரண்டு** விடயங்களினூடாக விளக்குக.

(iii) பாடசாலை ஊடகச் சமூகத்தினால் முன்வைக்கப்படத்தக்க **நான்கு** படைப்பாக்கச் செயற்றிட்டங்களைப் பெயரிட்டு, அவ்வாறான செயற்றிட்டங்கள் ஊடாக பாடசாலையும் மாணவர்களும் அடையக்கூடிய **நான்கு** பயன்களைச் சுருக்கமாக விளக்குக.

(iv) சிறார்களுக்குக் கல்வியறிவூட்டுவதில் நாட்டார் கதைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பிலான **நான்கு** விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக.

3. (i) அபிவிருத்தித் தொடர்பாடலில் பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) செய்திப்பத்திரிகை ஊடகத்தில் வன்முறை சித்திரிக்கப்படும் விதங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றை** விவரிக்குக.

(iii) பலவீனமான செவிமடுத்தல் ஆற்றல் உருவாவதற்கு ஏதுவாகும் **மூன்று** காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக.

(iv) 'வதந்திச் சங்கிலி' என்பதனைச் சுருக்கமாக இனங்கண்டு, வதந்திகளை அடிப்படையாகக் கொண்டு சமூக முரண்பாடுகள் ஏற்படக்கூடிய **மூன்று** விதங்களை உதாரணங்களுடன் விளக்குக.

[பக் 2 ஐப் பார்க்க

Download Past Papers at : www.freebooks.lk

4. (i) போற்றத்தக்க வகையில் ஆளுள் தொடர்பாடலை மேற்கொள்வதற்கு விருத்தி செய்ய வேண்டிய தேர்ச்சிகள் **நான்கினைப்** பெயரிடுக.

(ii) "படைப்பாக்கத் தொடர்பாடலின் தோற்றுவாய்களுள் ஒன்றாக செய்திப்பத்திரிகைகள் இருந்து வருகின்றன." மேற்படிக் கூற்றை உறுதிப்படுத்தக்கூடிய **இரண்டு** விடயங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

(iii) "பிரசித்தமான பண்பாடு சமூகத்தின் வீழ்ச்சிக்கும்கூடக் காரணமாகலாம்." இந்தக் கூற்றுக்கு ஆதரவாக **மூன்று** விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(iv) "முரண்பாடுகள் சமூக முன்னேற்றத்திற்கு ஆதரவான காரணிகளாகும்."

இந்தக் கருப்பொருளுக்கு அமைவாக அதற்குச் சார்பான இரண்டு விடயங்களையும் எதிரான இரண்டு விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு பாடசாலைச் சஞ்சிகையொன்றுக்கு 250 சொற்களுக்குக் குறையாத கட்டுரையொன்றை எழுதுக.

5. சமூகத்தின் நலநோம்பலுக்காக ஊடகங்கள் அளப்பரிய பங்களிப்பைச் செய்கின்றன."

(i) பல்லினப் பண்பாட்டுச் சமூகமொன்றின் நல்வாழ்வுக்காக ஊடகங்கள் செயற்படவேண்டிய விதங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) தொடர்பாடலானது சமூகத்துக்கு முக்கியத்துவமானதாய் அமையும் விதம் தொடர்பான **நான்கு** விடயங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விவரிக்குக.

(iii) வேறுபட்ட மத உப பண்பாடுகளுக்குரிய குடும்பங்கள் மத்தியில், மானுட உறவுகளை விருத்தி செய்வதற்கு உதவும் சமய விழாக்கள் **இரண்டினை** உதாரணங்களுடன் விவரிக்குக.

(iv) நீங்கள் விரும்பும் ஏதேனும் சமயத்திற்கு உரித்தான, சமூகத்தில் சமாதானத்தைப் பேணுவதற்கான **இரண்டு** போதனைகளை இனங்கண்டு, ஒவ்வொன்றிற்கும் தலா **இரண்டு** உதாரணங்கள் வீதம் தந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

6. (i) தேசிய நெருக்கடிச் சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தினால் ஊடகத் தணிக்கை நடைமுறைப்படுத்தப்படும். சமூக ஊடகங்களைத் தணிக்கை செய்வதால் சமூகத்திற்கு ஏற்படும் அனுகூலங்கள், பிரதிகூலங்கள் **இரண்டு** வீதம் குறிப்பிடுக.

(ii) பொதுசனத் தொடர்பு நடவடிக்கைகளுக்காக முகநூலின் (Facebook) மூலம் பெற்றுக்கொள்ளத்தக்க நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **ஒன்றினை** விளக்குக.

(iii) "பழமொழிகள் சுதேச அறிவையும் ஞானத்தையும் வெளிப்படுத்துகின்றன." பழமொழிகளில் காணப்படும் தொடர்பாடல் முக்கியத்துவத்தை **மூன்று** விடயங்களினூடாக விளக்குக.

(iv) அபிவிருத்திச் செயற்றிட்டம் ஒன்றில் மதிப்பீட்டுச் செயலொழுங்கின் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாது என்பதை **நான்கு** விடயங்களுக்கூடாக விளக்குக.

7. தொடர்பாடல் செயற்பாட்டில் மாத்திரமன்றி விமர்சனத் துறையிலும் ஊடக விளங்கறிவு முக்கியமானதாகும்.

(i) ஊடக விளங்கறிவின் பிரதான எண்ணக்கருக்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) தற்காலத்தில் ஊடகங்கள் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணியாக மாறியுள்ளன. பூகோள ஊடகங்கள் தேசிய பண்பாட்டில் தாக்கம் செலுத்தியுள்ள விதத்தினை **இரண்டு** விடயங்களுக்கூடாக விமர்சனரீதியாக விவரிக்குக.

(iii) ஊடக விளங்கறிவானது திறன்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அவ்வாறான திறன்கள் **மூன்றினை** விவரிக்குக.

(iv) பூகோளப் பண்பாடானது தேசியப் பண்பாட்டின் மீது செல்வாக்கு செலுத்தும் விதம் தொடர்பான **நான்கு** விடயங்களை தொலைக்காட்சி ஊடகத்தினை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

***

Download Past Papers at : www.freebooks.lk

Dear students!

We have Past Papers and Answers (Marking Schemes), Model Papers and Note books for English, Tamil and Sinhala Medium).

Please visit :

www.freebooks.lk

or click on this page to vist our site!